# புனிதமாய் ஒரு புத்தாண்டு

பாண்டுரங்கனின்
நாமம் பாடி
ஆங்கிலப் புத்தாண்டின்
முதல் வினாடிகளை
ஆன்மீக வழியில்
ஆடிப்பாடி வரவேற்றோம்.

இனிய புத்தாண்டு
இருண்டுவிடாமலிருக்க
இரவின் இரண்டு மணி நேரத்தை
கடவுள் பெயர் சொல்லிக்
கூத்தாடிக் கழித்தோம்

ஒவ்வொரு நிமிடத்திலும்
உற்சாகம் நம்முடன்
உறவு கொண்டாடியது.

அத்தனை கடவுள்களும்
மொத்தமாய் எழுந்தருளி
ஆனந்தத்தை நமக்கு
ஆசீர்வதித்திருப்பர்

ராமஜயம் காதுகளுக்குள்
ராஜபரிபாலனம் செய்தது

குருவின் நாமங்கள்
கடாக்ஷத்தைக்
கொட்டிக்கொடுத்தது

கஜவேந்தனின் திருநாமம்
கருணை செய்வதற்குக்
கரம் நீட்டியது

கோவிந்தநாம சங்கீர்த்தனம்
கோலாகலத்திற்குப்
பச்சைக்கொடி காட்டியது

பாண்டுரங்கனின் திவ்யநாமங்கள்
பரவசத்தை நரம்புகளுக்குப்
பரிசளித்தது

எங்கள் புத்தாண்டு
புனிதமாய்ப் பிறந்தது

ஸ்ரீ ஜெயக்ருஷ்ண தீக்ஷிதரின்
நாபியிலிருந்து புறப்பட்ட
பகவன் நாமகீர்த்தனைகள்
காற்றில் கலந்து
எங்கள் காதுகளுக்குள்
ப்ரயோகமானது.

புத்தாண்டின்
முதல் நிமிடங்களில்
எம்மை மறந்து...
சுற்றம் மறந்து
சூழலும் மறந்து...
உலகை மறந்து
உடமை மறந்து...
உடல் பொருள் ஆவி
அனைத்தும் மறந்து...
பகவானின் நாமத்தைப்
பாடி மகிழ்ந்து
இறையருள் தேடி
அகமகிழ்ந்தாடி...
ஆன்மீகத்துள்
ஐக்கியமானோம்.

அந்தப் புனித நிமிடங்களில்
ஆனந்தத்தை நமக்கு
அள்ளிக்கொடுத்த
ஸ்ரீ ஜெயக்ருஷ்ண தீக்ஷிதரின்
பாதமிரண்டிலும்
அனந்தகோடி நமஸ்காரத்தை
அர்ப்பணம் செய்குவோம்.

– கவிஞர் வைதா
ஸ்ரீ சங்கரா அபார்ட்மெண்ட்ஸ்
10 ஏரிக்கரைத் தெரு
மேற்கு மாம்பலம், சென்னை – 600 033